# நானாவித அறிவித்தல்கள்

## சுவாபிமாணி தஹம் சவிய இயக்கம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

பாராளுமன்ற உறுப்பினர் சான்த பண்டார ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் *48* ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "சுவாபிமாணி தஹம் சவிய இயக்கம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களையுடைய மேற்குறித்த "சுவாபிமாணி தஹம் சவிய இயக்கதை கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்:-

(அ) நற்பண்பாடுள்ள மார்க்க ஒழுக்கங்களை அபிவிருத்தி அடைய செய்வதன் மூலம் சிறந்த பண்பாடு நிறைந்த ஒரு சமுதாயத்தை எதிர்கால சந்ததியினருக்கு உருவாக்கிக் கொடுப்பது;

(ஆ) தேசிய அமைப்புக்கு உட்பட்ட சிக்கனம் செயலாக்கம் போன்றவற்றைப் பற்றி பயிற்சி அளித்து பரவச் செய்தல்;

(இ) மத வழிபாடுள்ள புண்ணிய ஆலயங்களுக்கு நிலைப்பாடுள்ள சொத்துக்களை பாதுகாப்பதும், முன்னேற்றமடைய செய்வதும்;

(ஈ) பாடசாலைகளின் உள்நடத்தை, மானசீகம் போன்றவை களுக்குப் பதிலாக உழைப்பு மானசீகம் போன்றவைகளை வளர்ச்சியடைய செய்வது அவர்களின் ஆத்மாக்களை விழிப்புணர செய்து உற்சாகத்துடனும் தைரியத்துடனும் எழுந்து நிற்பதற்கு வழுவைப் பெற்றுக் கொடுப்பதும்.

பிறவும்.

சான்த பண்டார,
பாராளுமன்ற உறுப்பினர்,
குருநாகல் மாவட்டம்.

1-105

---

## மடஹபொல ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நெரஞ்சன் விக்கிரமசிங்க ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் *48* ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் " மடஹபொல ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றத்தை நிலையியற் சபையாக மாற்றுவதற்கானதொரு சட்டம்" எனக் கருதப்படும். சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன். இச்சட்ட மூலத்தின் பொதுவான நோக்கம் அமைப்பாக கூட்டிணைப்பதாகும்.

(அ) பௌத்த சாசனத்தை போதித்து பாதுகாத்தல், பௌத்த உரிமைகளைப் பாதுகாத்தல், பௌத்தர்களின் ஆன்மீகக் கல்வி, கலாச்சார மற்றும் சமூக உரிமைகளைப் பாதுகாத்தல்;

(ஆ) வரலாற்று முக்கியத்துவமிக்க யாப்பஹுவ பிரதேசத்தில் பௌத்த பிக்குமார்களின் முன்னேற்றம் மற்றும் பண்புசார் விருத்தியை மேற்கொள்வதன் மூலம் சமூக விழுமிய மற்றும் பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்துலும்.

பிறவும்.

நெரஞ்சன் விக்கிரமசிங்க,
பாராளுமன்ற உறுப்பினர்,
குருநாகல் மாவட்டம்.

1-138

---

## யூ. எல். எம். பாறூக் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ஏ. எச். எம். அஸ்வர் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் *48* ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "யூ. எல். எம். பாறூக் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களையுடைய மேற்குறித்த மன்றத்தை கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

(அ) சிறுவர்கள், அங்கவீனர்கள், விதவைகள், பெண்கள் மற்றும் ஏழைகளின் வாழ்வில் சுபீட்சத்தை ஏற்படுத்தல் ;

(ஆ) இலங்கை வாழ் இனங்களுக்கிடையே சமாதானம், தூய எண்ணங்கள், பரஸ்பர உறவுகள் போன்றவற்றை வளர்க்க ஊக்குவித்தல்.

பிறவும்.

ஏ. எச். எம். அஸ்வர்,
பாராளுமன்ற உறுப்பினர்.

1-142

---

## பிய தசுன மன்றம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

அருந்திக பெர்ணான்டோ ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் *48* ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "பிய தசுன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களையுடைய மேற்குறித்த மன்றத்தை கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

(அ) இளைஞர்களின் உழைப்பு, அவர்களின் சக்தி போன்றவற்றைப் பயன்படுத்தி சமூகத்தை முன்னேற்ற நடவடிக்கை எடுத்தலும் அதற்குரிய வசதியளித்தலும்.

பிறவும்.

அருந்திக பெர்ணான்டோ,
பாராளுமன்ற உறுப்பினர்,
புத்தளம் மாவட்டம்.

1-143

